இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 243 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – சித்திரை 01 – செவ்வாய்க்கிழமை 14 ஏப்ரல் 2026 – மதுரை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 243 : Thiruvalluvar Year - 2057 - Chithirai 01 - Tuesday 14 April 2026 - Madurai 16 Pages ₹ 5.00




## ‘வடக்கு வாழ்கிறது; தெற்கு தேய்கிறது’ என்ற நிலைமாறி—

# ‘திராவிட மாடல்’ ஆட்சியில் - தெற்குதான் வழிகாட்டுகிறது!



## பரமக்குடி - மாபெரும் தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில்

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமித உரை!

பரமக்குடி, ஏப். 14–

**கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (12.04.2026) மாலை, பரமக்குடியில் நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தல் பரப்புரைப் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகையில், “வடக்கு வாழ்கிறது; தெற்கு தேய்கிறது” என்ற நிலையை மாற்றி, “தெற்குதான் வழிகாட்டுகிறது” என்ற நிலையை உருவாக்கியுள்ளது திராவிட மாடல் ஆட்சி என்றும், “பொதுசிவில் சட்டம் கொண்டு வருவோம் என்று கூறி நாட்டின் பன்முகத் தன்மைக்குச் சவால் விடும் பா.ஜ.க.வைத் தமிழ்நாட்டிற்குள் அழைத்து வரும் பல்லக்குத் தூக்கிதான் பழனிசாமி!” என்றும் குறிப்பிட்டார்.**

**கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு :-**

நெஞ்சை அள்ளும் அழகிய கடற்கரை மாவட்டம், இந்த இராமநாதபுரம்! இராமநாதபுரத்தின் சிறப்புகள் என்ன..! இராமேஸ்வரம் திருக்கோயில்! உலகப் புகழ்பெற்ற குண்டு மிளகாய்! பசுமையான குளங்கள்!

**சாதி, மத வேற்றுமைகள் கடந்து – மக்கள் நல்லிணக்கத்துடன் வாழும் மாவட்டம்!**

அதுமட்டுமா, மதிப்புமிக்க மனிதர்கள் பலர் இந்த மண்ணில் பிறந்தார்கள்..! சேதுபதி மன்னர்கள் - வள்ளல் பாண்டித்துரைத் தேவர் - பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் திருமகனார் - தியாகி இமானுவேல் சேகரனார் - உலகையே இந்தியாவின் பக்கம் திரும்பிப் பார்க்க வைத்த அணு விஞ்ஞானி -மேனாள் குடியரசுத் தலைவர் மதிப்பிற்குரிய அப்துல் கலாம்! இவர்களை எல்லாம் தந்த மண், இந்த மண்! சாதி மத வேற்றுமைகளைக் கடந்து, அனைத்து மக்களும், நல்லிணக்கத்துடன் வாழும் மாவட்டம்!

2006-க்கு முன்பு வரை, இந்த மாவட்டத்தை ‘தண்ணியில்லாத காடு’ என்று சொல்வார்கள்! அதை மாற்ற நான் உள்ளாட்சித் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றவுடனே, தலைவர் கலைஞர் அவர்களின் அறிவுரைப்படி, இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை உருவாக்கினேன். அதைத் தொடங்கி வைக்க வருகை தந்த தலைவர் கலைஞர் அவர்கள், அந்த மேடையிலேயே சொன்னார். “இந்தத் திட்டப் பணியை, மூன்று ஆண்டுகளில் செய்ய முடியும் என்று எனக்கு அதிகாரிகள் சொல்லி இருக்கிறார்கள். இதை, முன்னரே முடிக்க முடிந்தால், பரிசுப் பொருட்களோடு திறப்பு விழாவுக்கு வருகிறேன்” என்று சொன்னார். இரண்டே ஆண்டுகளில், உங்களுக்காக அதைச் செய்து முடித்து, அதிகாரிகளுக்கு அந்தப் பரிசை பெற்று கொடுத்த இந்த ஸ்டாலின், இன்றைக்குக் பெருமையோடு உங்களிடம் வாக்கு கேட்க வந்திருக்கிறேன்.

அப்போது மட்டுமா, கடந்த ஐந்தாண்டுகளில் இராமநாதபுரம் மாவட்டத்தை புது உயரத்துக்கு கொண்டு சென்றிருக்கும் உரிமையோடும் உங்களிடத்தில் வாக்கு கேட்க வந்திருக்கிறேன். இராமநாதபுரம் அடுத்த கட்ட வளர்ச்சிக்கு ரெடியா? [‘ரெடி’ என மக்கள் குரல்.] திராவிட மாடல் 2.0-க்கு ரெடியா? [‘ரெடி’ என மக்கள் குரல்.] மகிழ்ச்சி!

**‘டபுள் டிஜிட்’ பொருளாதார வளர்ச்சிக்கு கடுமையாக உழைத்திருக்கிறோம்!**

நாம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபோது, தமிழ்நாடு என்ன நிலையில் இருந்தது? கொரோனாவில் ஆக்சிஜன் சிலிண்டர்கள் கூட கிடைக்காத நிலையில் இருந்தது. தமிழ்நாட்டின் பொருளாதாரம் 0.07 விழுக்காடு என்று சரிந்து கிடந்தது. நிதிநிலைமை படுபாதாளத்தில் இருந்தது. போர்க்கால அடிப்படையில் என்று சொல்வார்கள் அல்லவா... அது போன்று, முதலில் கொரோனாவில் இருந்து மக்களை மீட்டெடுத்தோம்! அடுத்து, திறமையான நிர்வாகத்தால் நிதி நிலைமையை மீட்டெடுத்திருக்கிறோம்! அதன் பயனாக, இந்தியாவிலேயே முதல் மாநிலமாக 11.19 விழுக்காடு என்ற ‘டபுள் டிஜிட்’ பொருளாதார வளர்ச்சியைக் கொண்டு வந்திருக்கிறோம்! இதெல்லாம் சாதாரணமாக நடக்கவில்லை! கடுமையாக உழைத்திருக்கிறோம்!

சிந்தித்துப் பாருங்கள்... கடந்த ஐந்தாண்டுகளில் என்னைச் செய்திகளில் பார்க்காத நாள் இருக்காது. ஆய்வுக்கூட்டம் - கள ஆய்வுகள் - அரசு நலத்திட்ட விழாக்கள் - காணொலி வாயிலாகத் திறப்பு விழாக்கள் - நேரடியாக மக்கள் சந்திப்பு என தொடர்ந்து இயங்கிக் கொண்டே இருந்தேன். நான் மட்டுமல்ல, அரசு இயந்திரத்தையே முழுமையாகச் செயல்பட வைத்தேன். அமைச்சர்கள் தொடங்கி, கடைநிலை ஊழியர்கள் வரைக்கும், கடுமையான உழைப்பைப் போட்டு, தமிழ்நாட்டை மீட்டு, இன்று இந்தியாவிலேயே நம்பர் ஒன் மாநிலமாக தமிழ்நாட்டைக் கொண்டு வந்திருக்கிறோம்.







**“தந்தை பெரியார் – பேரறிஞர் அண்ணா – தலைவர் கலைஞர் கட்டிக்காத்த தமிழ்க் கோட்டையை மதவாதக் கும்பல் ஆக்கிரமிக்க அனுமதிக்காதீர்!”**

தொடர்ச்சி 3–ஆம் பக்கம்